**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : DVC 7/2023 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW-3 | Village: |
| Name : அக்பர் அலி | Age : 56 |
| Father's/Husband's Name : முகமது அலிப் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 28.03.2025**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மனுதாரருக்கும், அவரது கணவருக்கும் நடந்த திருமணத்தில் நான் கலந்து கொண்டதற்கான புகைப்படங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. முகமது தஸ்லீம் கும்பகோணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் மனுதாரரின் கணவரான மேற்படி அசல் வழக்கின் வாதி முகமது தஸ்லீம் என்பவருக்கு உரிய பங்கினை கொடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று எதிர்மனுதாரர்கள் தெரிவித்து உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

சொத்தை பாகபிரிவினை செய்வது சம்பந்தமாக தான் இரு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மனுதாரரின் திருமணத்தில் எதிர்மனுதாரர்கள் கலந்து கொள்ளவில்லை என்றாலும், அதற்கான புகைப்படங்கள் எதுவும் தாக்கல்

செய்யப்படவில்லை என்றாலும் திருமணத்தில் கலந்து கொண்டார்கள். புகைப்படங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, மனுதாரரின் கணவர் முகமது தஸ்லீம் அவரது பங்கிற்கு கூடுதலான பாகம் கேட்டு அதனை எதிர்மனுதாரர்கள் தரவில்லை என்பதால் எதிர்மனுதாரர்களை பழிவாங்க வேண்டுமென்பதற்காக மனுதாரரும அவரது கணவரும் பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2025.04.18 15:59:56 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**